**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 344/2021**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாடக்கண்ணு | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of June 19th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 29.09.2019 ம் தேதி, இரவு 09.45 மணியளவில் வழக்கின் எதிரிகள் முன் விரோதம் காரணமாக கீழப்பாவூர் முப்புடாதி அம்மன் கோவில் கொடை விழாவில் பாதுகாப்பு அலுவலில் இருந்த அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய

எதிரிகளை அவர்கள் கண்டித்ததற்கு "எங்கள் ஊரில் வந்து சத்தம் போட இவர்கள் யார்" என்று வாக்குவாதம் செய்தார்கள் என்றும், அரசு பணி செய்ய விடாமல் தடுத்தார்கள் என்றும், எதிரிகள் இருவரும் இரும்பு கம்பியால் கெட்ட வார்த்தைகளால் பேசி, 1 வது எதிரி கையில் வைத்திருந்த கம்பியால் அ.சா.1 ன் தலையை நோக்கி "இத்தோடு செத்து ஒழி" என்று சொல்லி தாக்கினார் என்றும், அவர் விலகி விட்டதால் உயிர் பிழைத்தார் என்றும், 2 வது எதிரி அ.சா.2 ஐ "எங்கள் ஊர்ல நாங்க ஆடுவதை நீங்க எங்க வந்துல கேட்டீங்க" என்று சொல்லி இரும்பு கம்பியால் தாக்கினார் என்றும்,அவர் சுதாகரித்து கொண்டு விலகிக்கொண்டார் என்றும், 2 எதிரிகளும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.06.21 15:55:27 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 344/2021</u>**

**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பையா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of June 19th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் இந்த கையெழுத்து போட்டு கொடுத்தேன். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2. இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 30.09.2019 ம் தேதி காலை 09.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடத்தை காவல் ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள்

என்றும், அதில் நானும், சாட்சி தங்கபாண்டி என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.06.21 15:55:39 +0530